**வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்: 2354 /ஆ4/ 2024, நாள்.05.08.2024**
– – –

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –இடைநிலை /மேல்நிலை துணைத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டமை – மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் 07.08.2024 (புதன்கிழமை) பத்தாம் வகுப்பு, பணிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சிபெற்ற மற்றும் தோல்வியுற்ற மாணவர்களுக்கான சிறப்பு வழிகாட்டுதல் முகாம் – பள்ளித்தலைமை ஆசிரியர்கள் (Carreer Guidance ) ஆசிரியருடன் மாணவ /மாணவிகளை பெற்றோரோடு அழைத்து வர தெரிவித்தல்–தொடர்பாக

பார்வை : வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைகள் நாள் 03.08.2024

=========

மேற்காணும் பொருள் சார்ந்து வேலூர் மாவட்டத்தில் ஜூன்/ஜூலை –2024 இடைநிலை /மேல்நிலை துணைத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டதை தொடர்ந்து மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையிலான கூட்டம் 03.08.2024 அன்று நடைபெற்றதை தொடர்ந்து , ஏற்கனவே தலைமையாசிரியர்கள் கூட்டத்தில் தெரிவித்துள்ளபடி வேலூர் மாவட்டத்தில் வருகின்ற 07.08.2024(புதன்கிழமை) அன்று ஜூன்/ஜூலை –2024 நடைபெற்று முடிந்த சிறப்புத் துணைத்தேர்வில் பத்தாம் வகுப்பு, மற்றும் பணிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சிப்பேற்ற மற்றும் தோல்வியுற்ற மாணவ /மாணவிகளுக்கான சிறப்பு வழிகாட்டுதல் முகாம் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

- <u>பேர்ணாம்பட்டு, குடியாத்தம், கே.வி.குப்பம்</u> ஆகிய ஒன்றியங்களில் உள்ள ஜூன்/ஜூலை –2024 நடைபெற்று முடிந்த சிறப்புத் துணைத்தேர்வில் பத்தாம் வகுப்பு, மற்றும் பணிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சிப்பெற்ற மற்றும் தோல்வியுற்ற மாணவ / மாணவிகளை சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியகள் (carreer Guidance )ஆசிரியருடன் மாணவர்களின் பெற்றோருடன் முகாம் நடைபெறும் இடமான <u>குடியாத்தம் , நடுபேட்டை , அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மையத்திற்கு காலை 9.30 மணிக்கு</u> அழைத்துவர உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித்தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.
- <u>வேலூர் நகர், புறநகர், காட்பாடி, அணைக்கட்டு, கணியம்பாடி</u> ஒன்றியங்களில் உள்ள ஜூன்/ஜூலை –2024 நடைபெற்று முடிந்த சிறப்புத்

துணைத்தேர்வில் பத்தாம் வகுப்பு, மற்றும் பணிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சிப்பெற்ற மற்றும் தோல்வியுற்ற மாணவ / மாணவிகளை **காட்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மையத்திற்கு காலை 9.30 மணிக்கு** அழைத்துவர உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித்தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பள்ளித்தலைமையாசிரியர்கள் மாணவர்களின் விவரங்களை சார்ந்த முகாம் மைய பள்ளி தலைமையாசிரியர்களுக்கு இன்று மாலை 05.00 மணிக்குள் ஒப்படைத்திட தெரிவிக்கப்படுகிறது.

**குறிப்பு:** முகாம் மையத் தலைமையாசிரியர்கள் ஒன்றியங்களிலிருந்து பெறப்பட்ட மானவர்களின் விவரங்களைக் கொண்டு வழிக்காட்டுதல் முகாமினை சிறப்பாக நடத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த முகாம் மைய பள்ளித்தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**முகாம் மைய பொறுப்பாளர்களாக கீழ்க்காணும் பள்ளித்துணை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

1. திரு.மணிவாசகம் பள்ளித்துணை ஆய்வாளர், முதன்மைக் கல்வி அலுவலகம்,வேலூர். ( அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, நடுபேட்டை,குடியாத்தம்)
2. திருமதி.ஷைனி மோல் பள்ளித்துணை ஆய்வாளர், மாவட்டக் கல்வி அலுவலகம்(இடைநிலை) , வேலூர். (அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,காட்பாடி)

**//ஓம்.செ.மணிமொழி//**
**முதன்மைக் கல்வி அலுவலர் ,**
**வேலூர் .**

**பெறுநர்**

- அரசு /நிதியுதவி /நகரவை /ஆதிதிராவிட நல உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்.
- சார்ந்த முகாம் மையப் பள்ளித் தலையமையாசிரியர்கள்,வேலூர் மாவட்டம்.
- பள்ளித்துணை ஆய்வாளர்கள் (உரிய வழியாக)

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் /தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பிவைக்கப்படுகிறது.